தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.1.2025), சென்னையில் வருகின்ற பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள ஏ.டி.பி. டென்னிஸ் போட்டியை நடத்துவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ. 1 கோடிக்கான காசோலையை தமிழ்நாடு டென்னிஸ் சங்க தலைவர் விஜய் அமிர்தராஜ் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் தமிழ்நாடு டென்னிஸ் சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (23.1.2025) தேசிய அளவிலான கூடைப்பந்து போட்டி மற்றும் தேசிய அளவிலான கையுந்து போட்டி, இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டு கூட்டமைப்பு (SGFI) நடத்திய 68 வது தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தேசிய கூடைப்பந்து போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டின் வீரர், வீராங்கனைகள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள், பயிற்றுநர்கள் உடனிருந்தனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில்

மதுரவாயல் தெற்குப் பகுதியில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்புரை!

சென்னை, ஜன. 24 -

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக் கூட்டம் நாளை *(25.01.2025 - சனிக்கிழமை)* மாலை 5.00 மணியளவில், போரூர், காரம்பாக்கம், நவரத்தினமால் ஜெயின் திடலில் நடைபெறுகிறது.

இக்கூட்டம் மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளரும், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி தலைமையிலும், மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் லயன் எஸ்.அரவிந்த் ரமேஷ், விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எ.எம்.வி.பிரபாகரராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், க.தனசேகரன், எஸ். அருணாசலம், காசிமுத்து மாணிக்கம், மதுரவாயல் தொகுதி தேர்தல் பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம், எஸ்.பத்மபிரியா, ரத்னா லோகேஷ்வரன், பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி, மாவட்டக் கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி, மு.மனோகரன், பா.வாசுகி பாண்டியன், எஸ்.பாஸ்கரன், கே.கண்ணன எம்.சி, மு.ராஜா எம்.சி, எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி, இரா. துரைராஜ் எம்.சி, எஸ்.வி. ரவிச்சந்திரன் எம்.சி, வி.இ.மதியழகன் எம்.சி துரை கபிலன், அரிமா சு. சேகர், ஜி.வெங்கடேசன், வழக்கறிஞர் எம்.ரீதரன் எம்.சி, வீர.கனிமொழி, சைதை சம்பத், சைதை மா. அன்பரசன், எம்.கே.ஏழுமலை, ப.ரவி, உ.துரைராஜ், மின்னல் கந்தப்பன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், எஸ்.டி.தங்கராஜன், ரா. பாலசுந்தரம், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், தா.பஷீர், டி.ஜே.பாஸ்கர்,

வி.ராஜேஷ், அ.விஜயபாலா, எஸ்.பி.அருள், கே.குமரேசன், வே.ஆனந்தம், ஏ.கே.ஆனந்த், எஸ். தீபக், ம.பார்த்திபன், எம். விநாயகமூர்த்தி, சைதை சாதிக், கழக த.ரமேஷ், தரமணி ஜெகதீசன், பா. அருண்குமார், டி. கனிமொழி, சி.பரிமேலழகன், சி. சுரேஷ், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், ஜி.வரதன், மருத்துவர் அனிஸ், எம்.எஸ்.ஹரிபாபு, கோ. பாஸ்கர், எம்.ஆர்.சசிகுமார், எஸ்.முகேஷ், நிஷா சையத், எஸ்.பாலமுருகன், முகப்பேர் கே.நீலகண்டன், ச.சங்கர்கணேஷ் எம்.சி, செ.ரவி, பி.எம்.செல்வராஜ், எஸ்.பாரதி எம்.சி, கே.ராஜி எம்.சி, ஆர்.கர்ணல், தீ. பாலாஜி, எம்.ஏ. செந்தில்சுரேஷ், ஆ.மாலினி எம்.சி, ம.உதயகுமார், என்.ஜெயச்சந்திரன், எ.எம்.யுவராஜா, ஆர்.கௌரிசங்கர், ப. கிரிஜா, என்.ரவி, எஸ். ரமேஷ்ராஜ், த.ரமேஷ், அ.மோசஸ், தி.சார்லஸ், ஆ.செல்வம் எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், ப.ஆலன், எம்.ரூபன், ஹேமலதா கணபதி எம்.சி, செல்வி ரமேஷ் எம்.சி, சாந்தி இராமலிங்கம் எம்.சி, எம்.இ.ஸ்டாலின் எம்.சி, ரமணி மாதவன் எம்.சி, க.கைலாசம், இரா. ராஜேந்திரன், எம்.எல். நாதன், வி.விஜயன், ஆர். சேகர், எஸ்.ரவி, எ.டி.எத்திராஜ், ஜி.ராமகிருஷ்ணன், எஸ்.திருநாவுக்கரசு, கே.நாராயணன், ஆர்.சிவலிங்கம், கோ.இராமலிங்கம், க.பிருந்தாவணன், ஆர். ரசூல்தீன், ஆர்.ராகேஷ், ச. எழில்அரசு, கே.ராஜ்குமார், கே.முரளி, பி.சங்கர், எம். ஆர்.சதீஷ், ஜி.குப்புசாமி, எம்.கே.ஞானசேகரன், கு. சதீஷ்குமார், கே.சங்கர், கே.எஸ்.மாறன்குமார்,

க.நரேன்கணபதி, எஸ். சண்முகசுந்தரம், எம்.செல்வதுரை, எஸ்.நித்தியானந்தன், ஆர்.சுரேஷ்பாபு, எம்.மதன்ராஜ், மூன்லைட் டி.ரவி, டி.சக்கரபாணி, பூத்தப்பேடு பி.ரகு, ஜி.இ.மகேஷ், சி. ராஜேந்திரன், கே.பீர்முகமது, ஆர்.லட்சுமி, எஸ்.முருகன், எஸ்.காளிஸ்வரி, டி.சத்தியசீலன், கே.ராஜேஷ், பி.சூர்ய பிரகாஷ், இ.பிரசாந்த், அ.லாவண்யா, எஸ்.மணிகண்டன், பி.நவராஜ், வி.செல்வகுமார், எம்.டில்லி ராஜா, பி.தயாநிதிபிரபு, என்.ராஜ்கமல், ஜெ.முருகன், வி.வெங்கடேசன், எம். ஏ.மதிவாணன், பி.ஜெய பிரகாஷ், எஸ்.ஜி.எம்.மனோஜ் மாதவன், வ.கண்ணன், எம். அக்பர்ஷெரிப், ஏ.மணிகண்டன், ஏ.செல்வம், உதயம் இ.வேணு, எம்.ஜேம்ஸ், எம்.சுதாகர், பி.ராஜேஷ், பி. பார்த்திபன், கே.சிங்கார வேலன், எஸ்.அரிகிருஷ்ணன், ஆர்.அமுதாராமச்சந்திரன், ஜி.வசந்திபாய், ஆர். வினோத், எஸ்.பிரதீப் குமார், ஜெ.ஜெயசுதா, எம். ஜி.சாமிநாதன், டி.யுவராஜ், எஸ்.ஷர்மிளா, ஐ.டார்வின், எம்.ஹரிகரன், எம்.ஜி.மகாலிங்கம், எம்.வெங்கட்முருகன், கே.ராம், எம்.கே.மகாதேவன், பா.சிவசங்கர், ஏ.முகிலன், ஆர்.எஸ்.கிரிதர், பி.லோகேஷ், எஸ்.பாபு, ஏ. நூர்தீன், எம்.ஏ.சேகர், எம். அர்ஜீன், என்.எம்.ஜானகிராமன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் கலந்து கொள்கிறார்கள்.

வ.செல்வகுமார் எம்.சி, வே.மதியழகன், இரா.பால் பாண்டியன், சி.சுந்தர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிடமாடல் அரசின்

தொழில்துறையில் பெண்களின் மகத்தான பங்களிப்பை உலக நாடுகள் உற்று நோக்குகின்றன!

டாவோஸ் நகரின் உலகப் பொருளாதார மன்றத்தில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

டவோஸ், ஜன. 24 -

சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸில் நடைபெற்ற உலக பொருளாதார மன்றம் 2025 மாநாட்டில் வளர்ந்து வரும் உலகப் பொருளாதாரத்திற்காக STEM துறையில் பாலின சமத்துவத்தை ஊக்குவித்தல் என்ற தலைப்பில், தொழில்நுட்ப மையத்தில் பெண்கள் *Women in Tech Hub* என்ற அமர்வில் தமிழ்நாட்டை பிரதிநிதித்துவப் படுத்தி உரையாற்றிய தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சர் முனைவர் டிஆர்பி ராஜா அவர்கள், திராவிட நாயகர் முதலமைச்சர் தலைமையில் தமிழ்நாட்டில் தொழில்துறையில் பெண்கள் அதிக அளவில் பங்கேற்று சாதனை படைத்து வருவது பற்றி குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் அவர் ஆற்றிய உரை வருமாறு:

"பெண்களை அதிக அளவில் ஊக்குவித்து, பணியாளர்களாக ஈடுபடுத்துவதில் தமிழ்நாடு சாதனை படைத்து வருகிறது. இந்தியா முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்து பெண்களில் 43% பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமே. இந்த குறிப்பிடத்தக்க சாதனை, 100 ஆண்டுகளுக்கும் மேலாக சமூக நீதிக்காக போராடி, பெண்களை பொருளாதார வல்லமைமிக்க சமமான பங்குதாரர்களாக மாற்றிய திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படையில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு தலைமையின் கீழ், புதுமைப் பெண், விடியல் பயணம், தோழி விடுதிகள் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை போன்ற முன்னேற்றத் திட்டங்களுடன் தமிழ்நாடு இந்த மரபைத் தொடர்ந்து வளர்த்து வருகிறது, இதன் மூலம் பெண்கள் நம்முடைய பொருளாதார முன்னேற்றத்தின் முன்னணியில் இருப்பதை உறுதி செய்கிறது.

உலகம் தமிழ்நாட்டின் வெற்றியை கவனிக்கத் தொடங்கியுள்ளது, மேலும் நாங்கள் எங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் பெருமையை அடைகிறோம், இது நாங்கள் விரும்பும், *inclusive growth* எனும் உள்ளடக்கிய வளர்ச்சியின் பார்வையை வலுப்படுத்துகிறது.

இவ்வாறு அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் உரையாற்றினார்.

சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸில் நடைபெற்ற உலக பொருளாதார மன்றம் 2025 மாநாட்டில் வளர்ந்து வரும் உலகப் பொருளாதாரத்திற்காக STEM துறையில் பாலின சமத்துவத்தை ஊக்குவித்தல் என்ற தலைப்பில், தொழில்நுட்ப மையத்தில் பெண்கள் Women in Tech Hub என்ற அமர்வில் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா உரையாற்றினார்.

தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. முதற்கட்டமாக திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
24.01.2025 வெள்ளிக்கிழமை	காலை 9.00 மணி	திருவள்ளூர் மத்திய	ஜெய்கிரீஷ் திருமண மண்டபம், தண்டரை, பட்டாபிராம்.
26.01.2025 ஞாயிற்றுக்கிழமை	காலை 9.00 மணி	திருவள்ளூர் கிழக்கு	கிரே சூட் ஹோட்டல், காக்கவாக்கம், எல்லாபுரம்.
27.01.2025 திங்கட்கிழமை	காலை 9.00 மணி	திருவள்ளூர் மேற்கு	டி.கே.என். ரெசிடென்சி, சென்னை நெடுஞ்சாலை, திருத்தணி.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 23-01-2025

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில்

வடசென்னை வளர்ச்சித்திட்டப் பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

சென்னை, ஜன. 24-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று *(23.1.2025)* வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி, எண்ணூரில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடம் மற்றும் நவீன சந்தையையும், ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியில் கட்டப்பட்டு வரும் தண்டையார் பேட்டை பேருந்து நிலையத்தையும், இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் கட்டப்பட்டு வரும் மூலக்கொத்தளம் சமுதாய நலக்கூடத்தையும் மற்றும் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் கட்டப்பட்டு வரும் கொண்டித்தோப்பு இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் 700 புதிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தாவது :

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலே அமைந்திருக்கின்ற இந்த அரசு வடசென்னை வளர்ச்சி திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தந்து கடந்த 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் தேதி தங்கசாலையில் ரூபாய் 4,500 கோடியில் பல்வேறு திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் ரூபாய் 6,350 கோடி செலவில் 252 பணிகள் தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 2024 நவம்பர் மாதம் 4ஆம் தேதி வால்டாக்ஸ் சாலையில் பல்வேறு பணிகளை துவக்கி வைத்தார்கள். துவக்கப்பட்ட பிறகு வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் எடுத்துக் கொண்ட பணிகளை வாரத்திற்கு மூன்று நாட்கள் களஆய்வினை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் இந்த வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் கட்டப்பட இருக்கின்ற 700 குடியிருப்புகளினுடைய பணிகளின் முன்னேற்றத்தை ஊடகத்தின் சார்ந்த நீங்களே பார்த்திருப்பீர்கள். புயல் வேகத்தில் இல்லை ஜெட் வேகத்தில் இந்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த பணி முடிவுற்று பயனாளிகளுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக பயனாளிகள் பயன்படுத்துகின்ற வகையில் இந்தப் பணிகள் அமையும்.

இன்று காலை முதல் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்ட பணிகளான திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி, எண்ணூரில் 58 சிறு வணிகம் செய்வதற்குண்டான கடைகளும், 300 பேர் அமரக்கூடிய ஒரு சமுதாய கூட பணிகளும் பார்வையிட்டு வந்தோம். அதை தொடர்ந்து ஆர் கே நகர் தொகுதியில் அமையவிருக்கின்ற தண்டையார் பேட்டை பேருந்து நிலையத்தை அனைத்து வசதிகளுடன் அலுவலகக் கட்டிடம், வணிக கட்டிடம், அதேபோல் பேருந்துகள் நிறுத்துகின்ற பஸ்பே என்று சொல்லப்படுகின்ற கட்டடங்கள் என ஒரு மிகப்பெரிய பேருந்து நிலையத்தை அமைக்கின்ற பணியையும் பார்வையிட்டு வந்திருக்கின்றோம். அதைத்தொடர்ந்து இராயபுரம் பகுதியிலே அமைய இருக்கின்ற திருமண மண்டபத்தையும், அதைத்தொடர்ந்து துறைமுகத்தில் அமையவிருக்கின்ற டயாலிசிஸ் சென்டர் பணிகளின் முன்னேற்றத்தை குறித்து ஆய்வு செய்து இருக்கின்றோம். இப்பொழுது ஐந்தாவது இடமாக வால்டாக்ஸ் சாலையில் 700 பயனாளிகளுக்கு பயன்படக்கூடிய குடியிருப்புகள் கட்டுகின்ற பணியை தற்போது பார்வையிட்டு இருக்கின்றோம்.

வடசென்னை வளர்ச்சி திட்டத்தை பொறுத்த அளவில் தமிழக முதல்வர் அவர்கள் எப்படி தேர்தல் அறிக்கையில் கூறியிருந்த 505 தேர்தல் அறிக்கையில் சுமார் 385 வாக்குறுதிகளை நிறைவேற்றி சொன்னதை செய்கின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றது. அதேபோல் வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் எடுத்துக்கொண்ட திட்டப் பணிகளை விரைவாக முடிக்கின்ற நோக்கத்தில் எங்கள் துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதி. காகர்லா உஷா அவர்களும், துறையினுடைய உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய அன்சுல் மிஸ்ரா அவர்களும், துறையினுடைய முதன்மை செயல் அலுவலர் அன்பிற்கினிய சிவஞானம் அவர்களும், அதேபோல் பெருநகரத்தின் உடைய மேயர் திருமதி. பிரியா ராஜன் அவர்களும், அந்தந்த தொகுதிக் குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தந்த தொகுதிக்குட்பட்ட மண்டலக் குழுத் தலைவர்கள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், சென்னை பெருநகரத்தின் உடைய மாநகராட்சி அதிகாரிகள் ஒருங்கிணைந்து இந்த பணிகளை துரிதப்படுத்தி வருகின்றோம். தமிழக முதல்வர் அவர்களுடைய கனவு திட்டமான வடசென்னை வளர்ச்சி திட்டம் நாளொரு மேனி வளர்ச்சியை நோக்கி வளர்ந்து வருகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது மேயர் ஆர்.பிரியா ராஜன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சுதர்சனம், கே.பி.சங்கர், ஜே.ஜே.எபிநேசர் அவர்கள், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, மாநகராட்சி நகரமைப்பு குழுத்தலைவர் இளைய அருணா, மண்டலக் குழுத் தலைவர்கள் தனியரசு, நேதாஜி யூ. கணேசன், பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. கோமதி சந்தோஷ், திருமதி.குமாரி நாகராஜ், ராஜேஷ் ஜெயின், தலைமை திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், மா.பாலமுருகன், மண்டல அலுவலர் பரிதா பானு, மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ. அலுவலர்கள் உடனிருந்தனர்.